ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,162 — 1960 ජූලි 22 වැනි සිකුරාදා — 22.7.1960

12,162 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 22 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | — | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்–வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 41 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகாரநிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## துணை விதிகள்

L. G. D.—GO. 14/48.

### கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்படி, புத்தளம் மாவட்டத்துப் புத்தளம் பற்றுக் கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் உண்டாக்கியதும், 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ஆம் இலக்க விசேட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமான பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சர் அங்கீகரித்ததுமான உபவிதிகள்.

வீ. சி. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சு.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 4 ந் உ.

#### அபாயமான, தீங்கான வியாபாரங்கள் பற்றிய உபவிதிகள்

1. கீழ்க்காணும் வியாபாரங்கள் தீங்கான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

பாடம்பண்ணிய மீன் அல்லது கருவாடு சேகரித்து வைத்தல்.
மொத்தமாக அல்லது சில்லறையாக விற்றற்பொருட்டு பழுதடையக் கூடிய உணவுப் பொருட்கள் சேகரித்து வைத்தல்.
செயற்கை உரத்தையேனும் செயற்கை உரம் செய்வதற்கு உபயோகிக்கும் பொருட்களையேனும் மூன்று மூடைகளுக்கதிகமாகச் சேகரித்து வைத்தல்.
மீன் பாடம்பண்ணல் அல்லது காயவைத்தல்.
மீனுக்கு " ஐஸ் " போடுதல்.
வீட்டுத் தளபாடங்கள் செய்தல்.
தும்பினாலேனும் கயிற்றினாலேனும் செய்த பொருட்களைச் சேகரித்து வைத்தல்.
வெற்றுப் போத்தல்கள் சேகரித்து வைத்தல்.
எண்ணெய் சேகரித்து வைத்தல்.
தச்சுத் தொழிற்சாலை வைத்தல்.
விறகுக் கடை அல்லது மரக்கடை வைத்தல்.
சவர்க்காரம் செய்தல் அல்லது சேகரித்து வைத்தல்.
செங்கற்கள் அல்லது ஓடுகள் சேகரித்து வைத்தல்.
பூச்சுமை அல்லது மினுக்குமை சேகரித்து வைத்தல்.
பிண்ணாக்கு சேகரித்து வைத்தல்.
சீமெந்து சேகரித்து வைத்தல்.
கள் சேர்க்கும் நிலையம் வைத்தல்.

2. கீழ்க்காணும் வியாபாரங்கள் அபாயமான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

கொப்பரா செய்தல்.
எண்ணெய் அல்லது வேறு எரிபொருள் அல்லது நீராவி அல்லது மின்சக்தி கொண்டியங்கும் இயந்திரம் உபயோகிக்கப்படும் வியாபாரம் எதுவும்.
அரிசி ஆலை அல்லது நெற் குத்தும் இயந்திரம் வைத்தல்.
தும்பு செய்தல் அல்லது சேகரித்து வைத்தல்.
பஞ்சு அல்லது வைக்கோல் சேகரித்து வைத்தல்.
தேங்காய்த் துருவல் செய்தல்.
மரம் அறுத்தல்.
மண்ணெண்ணெய்க்கடை வைத்தல்.
கொப்பரா சேகரித்து வைத்தல்.
கரி சேகரித்து வைத்தல்.
கொல்லுலை வைத்தல்.
கரிக்காகத் தேங்காய்ச் சிரட்டைகளை எரித்தல்.
இயந்திரத்தால் மிளகாய் அல்லது கறிச் சரக்குகள் அரைப்பதற்கான தாபனம் வைத்தல்.
வெடிவைத்துப் பாறை அல்லது கல் உடைத்தல்.
மோட்டார் வாகனங்களை கழுவித்துடைப்பதற்கு அல்லது செப்பனிடுதற்கு தாபனம் வைத்தல்.
நெல், குரக்கன் அல்லது வேறு எதும் தானியங்களை இயந்திரங் கொண்டு குத்துதல்.

3. கீழ்க்காணும் வியாபாரங்கள் தீங்கான, அபாயமான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

தும்புக்குச் சாயமூட்டுதல்.
செங்கற்கள் அல்லது ஓடுகள் செய்தல்.
மின் குளங்களில் மின்சக்தி நிரப்புதல்.
சுண்ணாம்பு சுடுதல், பாடம்பண்ணல் அல்லது தகர்த்தல்.
மட்பாண்டம் செய்தல்.